பக்கங்கள் 13+6

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 28 புதன்கிழமை 10.04.2024 அதிர்வு 254

## சுவிஸிலிருந்து வந்தவர் மறுநாள் சடலமாக மீட்பு!

சுவிஸிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த ஒருவர் வீட்டின் குளியலறையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நவாலி தெற்கைச் சேர்ந்த உதயகுமார் (வயது – 55) என்பவரே இவ்வாறு 04





# பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து வெளியேறியோருக்குப் பொறி வைப்பு

## மஹிந்த தலைமையில் கூடிய அரசியல் குழு தீர்மானம்

கட்சியின் ஒழுக்கத்தை மீறிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தை ஒழுக்காற்றுக் குழுவுக்கு வழங்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

பொதுஜன பெரமுனவில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி, வேறு அரசியல் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ள மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் நேற்றுக் கூடிய அரசியல் குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்துள்ளார். 04

# நெளுக்குளம் குளத்தினுள் ஆணின் சடலம்

## அடையாளம் காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

(கே.வசந்தன்)

வவுனியா, நெளுக்குளம் குளத்தினுள் இன்று காலை ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலத்தை அடையாளம் காண உதவுமாறு நெளுக்குளம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெளுக்குளம் – குளக்கட்டு பாதையூடாகச் சென்ற நபர் ஒருவர், குளத்தினுள் சடலம் மிதப்பதை அவதானித்தார். இதையடுத்து அவர் நெளுக்குளம் பொலிஸார் மற்றும் பொது அமைப்புக்களுக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு 04






குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

Gsm

GUNAAM'S SUPER MARKET

1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# வவுனியாவில் பெருநாள் தொழுகை

(கே.வசந்தன்)

வவுனியா, தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாட்டில் புனித நோன்புப் பெருநாள் திடல் தொழுகை வேப்பன்குளம் குளக்கட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள திடலில் இன்று காலை நடைபெற்றது.

தொழுகையை அஷ்ஷெய்க் அல்-ஹாபிழ் ஈ.எல்.றதீம் (மீஸானி) நடத்தினார்.

இதன்போது பெருந்தொகையான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டு தொழுகையில் ஈடுபட்டதுடன், ரமழான் வாழத்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.








# யாழ். மாநகர சபை ஆணையாளருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளருக்கு கிருஸ்ணேந்திரனுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தவறான தகவல்களை வழங்கி நீதிமன்றை பிழையாக வழிநடத்தியதாக தெரிவித்தே இந்த வழக்கு கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த மாதம் 17ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மாநகர ஆணையாளருக்கு அழைப்பாணையும் அனுப்பப்பட்டுள்ளது என்று நீதிமன்ற வட்டாரங்களிலிருந்து தெரிவருகின்றது.

# யாழில் காய்ச்சலால் மாணவி சாவு!

யாழ்ப்பாணத்தில் காய்ச்சல் காரணமாக மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த சிறிரங்கனாதன் மதுமிதா (வயது - 16) என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 7ஆம் திகதி இடையிடையே காய்ச்சல் ஏற்பட்டதால் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.

உடற்கூற்று மாதிரி மரணத்தைக் கண்டறிவதற்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# யாழ். நகரப் பாடசாலையில் மாணவர்களுக்குக் காசநோய்

## காரணத்தைத் தேடுகின்றது மருத்துவத்துறை


யாழ்ப்பாண நகரத்திலுள்ள ஆண்கள் பாடசாலை மாணவர்கள் சிலருக்கு காசநோய் கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களுக்கு அது எவ்வாறு பரவியது என்பதைக் கண்டறிய முடியவில்லை என மருத்துவத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பாடசாலையில் ஒரு வகுப்பில் கல்வி பயிலும் மாணவனுக்கு உடல் மெலிவு ஏற்பட்ட நிலையில் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அந்த மாணவனுக்குக் காசநோய் அறிகுறி இருப்பது கண்டறியப்பட்ட நிலையில் அவருடன் நெருங்கிப் பழகிய மாணவர்கள் சிலரை பரிசோதனைக்கு உட்படுத்திய நிலையில் அவர்களுக்கும் காசநோய் இருப்பது தெரியவந்தது.

பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு துறை சார்ந்த மருத்துவ நிபுணர்களால் சிகிச்சை வழங்கப்பட்டு வருவதுடன் தொடர்ந்தும் அவர்கள் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

மாணவர்களுக்கு காசநோயின் ஆரம்ப நிலை காணப்படுவதுடன் உரிய முறையில் சிகிச்சை பெற்றால் ஏனையவர்களுக்கு பரவமல் தடுக்க முடியும், எனவும் மருத்துவத்துறையினர் தெரிவித்தனர்.





# குடமுழுக்கு பெருவிழா சிறப்பு மலர்

வேலணை நாவலடிப்புலம் கண்ணாஓடையில் எழுந்தருளியுள்ள நாசியம்மன் ஆலயத்தில் குடமுழுக்கு கும்பாபிஷேகமும் அதனைத் தொடர்ந்து 12 நாள் மண்டலாபிஷேக நிகழ்வுகளும் நிறைவுற்று இறுதி நாளாகிய கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகம் நடைபெற்றது. அன்றைய தினம் “குடமுழுக்கு பெருவிழா சிறப்பு மலர்“ வெளியீடும் நடைபெற்றது. சிறப்பு மலரை ஆலய நிர்வாக சபைத் தலைவர் சு.சுந்தரலிங்கம் வெளியிட்டு வைத்தார். முதல் பிரதியை திரு இன்பநாயகம் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து அனைத்து பக்தர்களுக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன. மலரையும் வெளியீட்டு நிகழ்வையும் மனவளக்கலைப் பேராசிரியர் ஆ.தங்கராஜா தொகுத்து வழங்கினார்.











# புத்தாண்டு சுபவேளை பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

தமிழ் – சிங்களப் புத்தாண்டுக்கான சுபவேளை குறிப்புப் பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சம்பிரதாய முறைப்படி இன்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச சுபநேர கணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட சுபவேளை குறிப்புப் பத்திரமே இவ்வாறு ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

புத்தாண்டு பிறப்பு, புண்ணிய காலம், உணவு சமைத்தல், அடுப்பு பற்ற வைத்தல், உணவு உண்ணல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல், புத்தாண்டில் வேலைக்குப் புறப்பட்டு செல்லுதல் உள்ளிட்ட சுப காரியங்களுக்கான சுப நேரங்கள் மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபதிரன உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.





## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொதுஜன பெரமுன...

அதற்கமைய, அவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் ஆராய்ந்து அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படக்கூடிய ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் அரசியல் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு, கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, பொதுஜன பெரமுனவில் வெற்றிடமாகக் காணப்படும் தொகுதி அமைப்பாளர்கள் பதவிகளுக்கு விரைவில் பொருத்தமானவர்களை நியமிக்கவும் அதன் அரசியல் குழு தீர்மானித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைய இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, அனைத்து மாவட்டங்களுக்கும் மகளிர் ஒருங்கிணைப்பாளர்களை நியமிப்பதற்கும் அரசியல் குழுக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு, கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று மாலை கூடியது.

### சுவிஸிலிருந்து...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது தாயாரைப் பார்ப்பதற்காக நேற்றுமுன்தினம் வெளிநாட்டிலிருந்து அவர் இலங்கைக்கு வந்துள்ளார். இந்தநிலையில், நேற்று குளியலறைக்குச் சென்ற அவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

### நெளுக்குளம் குளத்தினுள்...

விரைந்த நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

குளக்கட்டின் மேற்பகுதியில் ஒரு சோடி காலணியும் காணப்படுகின்றது.

இந்த மரணம் தொடர்பில் விசாரணைகளைத் தடவியல் பொலிஸார் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் இணைந்து முன்னெடுக்கின்றனர்.

சடலத்தை அடையாளம் காண உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சடலமாகக் காணப்படும் நபர் மஞ்சள் நிற மேற்சட்டையுடன் சாரமும் அணிந்துள்ளார். அவர் 55 இற்கும் 60 இற்கும் இடைப்பட்ட வயதுடையவராக உள்ளார்.

# நமது நாட்டை உலகின் முதல் நாடாக மாற்ற எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்!

## ரமழான் பெருநாள் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



உலகெங்கிலும் வாழும் முஸ்லிம்கள் மாதம் முழுவதும் நோன்பு நோற்று பின்னர் ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்டதும் கொண்டாடும் ஈதுல் பித்ர் பெருநாள் இஸ்லாமிய மத நாள்காட்டியில் மிக முக்கியமான விழாவாகும். ரமழான் என்பது இஸ்லாத்தின் ஆன்மீகம் மட்டுமன்றி மனித மற்றும் சமூக விழுமியங்களை அங்கீகரிக்கும் – அதனை பறைசாற்ற கிடைத்த ஒரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

மாதம் முழுவதும் நோன்பின் சிறப்பைப் பேணி ரமழான் மாதத்தின் தலைப்பிறை கண்டதும் கொண்டாடப்படும் இந்தப் புனித பெருநாளை, உலகுக்குத் தர்மம் மற்றும் சமத்துவச் செய்தியை எடுத்துரைக்கும் மிக முக்கியமான சமய விழா என்றும் அழைக்கலாம்.

இலங்கை வாழ் சமூகத்துடன் பண்டைய காலம் தொட்டு இஸ்லாமியர்கள் நெருங்கிய சகோதரத்துவத்துடன் பேணிய உறவு உலகுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. இந்த தேர்தல் ஆண்டில் சகோதரத்துவ பந்தத்தை பலவீனப்படுத்த பல்வேறுபட்ட இனவாதிகள் முயற்சிக்கலாம். ஆனால் அந்த சகோதரத்துவத்தை தொடர்ந்தும் சேதப்படுத்த ஒரு சிறிய இனவாதக் குழுவுக்கும் நாம் இடமளித்தல் கூடாது.

மக்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டத்தின் போது இந்த சகோதரத்துவத்தின் கரங்கள் நாட்டுக்காக நீட்டப்பட்டதைக் கண்டோம். சிங்கள, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் என எந்த இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும், ஒரு தாயின் பிள்ளைகளாக ஒரே தேசமாக நம் நாட்டுக்காக முன்னோக்கி வந்தோம். இந்த மகத்தான ஈதுல் பித்ர் பெருநாள் தினத்தன்று அந்த சகோதரத்துவத்தின் கரங்கள் எதிர்காலத்தில் வலுப்பெற வேண்டும் என்று நான் மனப்பூர்வமாகப் பிரார்த்திக்கிறேன். அதன் மூலம் வங்குரோத்தாகி உள்ள நமது நாட்டை உலகின் முதல் நாடாக மாற்றத் தேவையான பலத்தை பெற எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையர்கள் போலவே உலகெங்கிலும் உள்ள அனைத்து முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கும் அமைதியான, நல்லிணக்கம் கொண்ட சகோதரத்துவம் வாய்ந்த ஈதுல் பித்ர் பெருநாளாக அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சஜித் பிரேமதாஸ,
இலங்கை நாடாளுமன்றத்தின்
எதிர்க்கட்சித் தலைவர்.

# சிறுபான்மையினரையும் சம அந்தஸ்தில் அரவணைக்கும் அரசியல் கோட்பாடுகளைப் பலப்படுத்துவதே தமது நோக்கம்!

## ரமழான் வாழ்த்துச் செய்தியில் ரிஷாட் பதியுதீன் எம்.பி. தெரிவிப்பு



முஸ்லிம்களுக்கு எதிரான ஏகாதிபத்திய போக்குகள் தோல்வியுறுவதற்கு புனித நோன்புப் பெருநாளில் பிரார்த்திக்க வேண்டும்.

பெருநாள் தினமான இன்று நமது எல்லோரதும் ஹலாலான தேவைகள் நிறைவேறட்டும். அல்லாஹ்வின் திருப்தியை எதிர்பார்த்து நோன்பு நோற்று, நல்லமல்கள் செய்த நாம் இந்த ஈமானின் பக்குவத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

நெருக்கடிகள், சோதனைகளின் போது பொறுமை மற்றும் தொழுகையைக் கொண்டு உதவி தேடுவதே சிறந்தது. ரமழானின் பக்குவங்கள் நமது முன்னேற்றப் பாதைகளுக்கு உறுதியாக அமையட்டும். சர்வதேச அளவில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள சவால்களை முறியடிக்க, ஈமானின் பலத்திலும் பக்குவத்திலும் நாம் அணி திரள வேண்டும்.

பலஸ்தீன மக்களுக்கு எதிரான ஏகாதிபத்திய போக்குகள் ஒருபோதும் வெல்லப்போவதில்லை. இந்தப் போக்குகளின் அதே சாயலிலே, எமது நாட்டு அரசியலை முன்னெடுக்கவும் சிலர் முயற்சிக்கின்றனர். சலுகைகளுக்காக சந்தர்ப்பங்களை நழுவவிடும் அரசியலையும் செய்ய முடியாது.

இவ்வாறு திரைமறைவில் செயற்பட்டு, நமது சந்தர்ப்பங்களை கபளீகரம் செய்வோருடன் இணங்கிச் செல்லும் நிலைப்பாட்டில் நாங்கள் இல்லை. சமூகங்களை நேசிக்கின்ற, சிறுபான்மையினரையும் சம அந்தஸ்தில் அரவணைக்கும் அரசியல் கோட்பாடுகளைப் பலப்படுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரிஷாட் பதியுதீன்,
நாடாளுமன்ற உறுப்பினர்.
தலைவர்,
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# முடவன் - குருடன் இணைவு

குருடனும் முடவனும் கூட்டு சேர்ந்த கதை பற்றி தென்னிலங்கை அரசியலில் இப்போது பேசப்படுகின்றது.

பார்வை இழந்த அந்தகனுக்குப் பாதை தெரியாது. பாதை தெரியும் முடவனுக்கோ நடக்க முடியாது. அதனால் வழிப் பயணத்துக்கு இருவரும் ஒன்று சேருகின்றனர். கூட்டு வைக்கின்றனர். குருடனின் தோளில் முடவன் ஏறி அமர்ந்து கொள்ள குருடன் நடக்கின்றான். முடவன் வழிகாட்டுகின்றான்.

இதுதான் நமக்குத் தெரிந்த குருடன் - முடவன் கூட்டுச் சேர்ந்த கதை.

இலங்கையின் கடந்த 75 ஆண்டு கால அரசியலை எடுத்துப் பார்த்தால் சுமார் 70 ஆண்டுகளுக்கு மேல் மாறி, மாறி ஆட்சி அதிகாரத்தில் இருந்தவை இரண்டு பிரதான கட்சிகள்தான். ஒன்று - ஐக்கிய தேசியக் கட்சி. மற்றது - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி.

ஆனால், இந்த இரண்டு பிரதான கட்சிகளுமே இன்று 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான' நிலைமைக்கு வந்துவிட்டன. இரண்டு கட்சிகளின் பெயரிலும் இன்று நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் தலா ஒவ்வொரு எம்.பிக்கள் மட்டுமே. மொட்டுக் கட்சியின் பட்டியலில் சு.கவின் 13 பேர் எம்.பிக்களாக இருப்பது வேறு விடயம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து உருவான ஐக்கிய மக்கள் சக்தி அதன் தாய் கட்சியின் பெரும் பகுதியை முழுமையாக விழுங்கி விட்டது.

அதேபோலத்தான் சு.கவிலிருந்து பிரிந்து விஸ்வரூபம் எடுத்தது மொட்டுக்காட்சி எனும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன. அதனிடமே சரணாகதி அடைந்த நிலைமையில் தாய்க் கட்சியான சுதந்திர கட்சி.

முன்னர் நாட்டை மாறி மாறி ஆளும் பிரதான கட்சிகளாக இருந்த ஐ.தே. கட்சியும் சு.கவும் இன்று வலு இழந்து, வலது குறைந்தமை போல் ஆகிவிட்டன. ஒருவகையில் நொண்டி - குருடன் நிலமைதான்.

அத்தகைய கூட்டு ஒன்று தெற்கில் உருவாகுவதாகத்தான் அவதானிகள் - நோக்கர்கள் - இப்போது கூறுகின்றனர் .

மொட்டுக் கட்சியின் தயவில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவிக்கு வந்த ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் மொட்டுக் கட்சிக்கும் இடையில் தேர்தல் கால உறவு சீரடையவில்லை. தனி வழி போக வேண்டிய சூழல் உருவாகி வருவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர்கின்றார்.

சிறுபான்மை இனத்தவர்களின் கட்சிகளினதும் மக்களினதும் வாக்குகளைத் தக்க வைப்பதற்கும் மொட்டு கட்சியிலிருந்து விலகி - விலத்தி - நிற்பது நல்லது என்று கருதுகின்றார் ரணில் விக்கிரமசிங்க.

இந்தப் பின்புலத்தில்தான் ஏனைய தரப்புகளின் ஆதரவைத் தேடி அவர் வலை விரிக்கின்றார். அந்த வகையில் சு.கவுக்கும் வலை விரிக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் சு.கவின் தலைவராக இதுவரை செயற்பட்டு வந்த மைத்திரிபால சிறிசேனவோ தனியான புதிய கூட்டணி ஒன்றை உருவாக்கி, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகக் களம் இறக்க முனைப்புடன் செயல்பட்டு வந்தார்.

அதனால் அவரை சு.க. தலைவர் பதவியில் இருந்து இறக்கி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயலாற்றும் விருப்புக் கொண்ட நிமால் சிறிபால டி சில்வா தரப்பிடம் கட்சி அதிகாரத்தை கைமாற்றச் செய்யும் நடவடிக்கை கட்சியின் முன்னாள் தலைவியும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றது. - இப்படி சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், தற்போதைய சிரேஷ்ட உப தலைவரும், மைத்திரியின் நெருங்கிய சகாவுமான பேராசிரியர் றோஹண லக்ஷ்மன் பியதாஸ கூறுகின்றார்.

மக்கள் மத்தியில் செல்வாக்கிழந்த முன்னைய பெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் புதிய அரசியல் பயணத்திற்காக ஒன்றிணையும் வாய்ப்பைத்தான் தென்னிலங்கை அரசியல் விமர்சகர்கள் முடவனும் குருடனும் கூட்டு சேர்ந்து ஒருவர் முதுகில் மற்றவர் வழி காட்டியபடி பயணம் செய்வதுடன் இப்போது ஒப்பிடுகின்றனர்.

# பெருநாள் கொண்டாட்டங்களில் சமூக உறவுகள் ஐக்கியப்படட்டும்!

## தேசிய ஐக்கிய முன்னணித் தலைவர் அசாத் சாலி தெரிவிப்பு

புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம்களை அல்லாஹ் பொருந்திக் கொள்ள பிரார்த்திக்கிறோம்.

ரமழானின் ஆத்மீக பக்குவங்கள் முஸ்லிம்களின் வாழ்க்கை கட்டமைப்பை கெட்டியானதாக்கும். நாலாபுறமும் சந்திக்க நேர்ந்துள்ள சவால்களை தோற்கடிக்க ஹலாலான சிந்தனைகள் துணைபுரியும். இந்த நம்பிக்கையில் நமது வியூகங்களை அமைப்பதே அவசியம். அல்லாஹ்வின் திருப்தியை அடிப்படையாகக் கொண்ட நமது இலட்சியங்களில் குறுக்கிட எவரையும் அனுமதிக்க முடியாது. இந்த ஈமானின் பக்குவத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

பெருநாள் கொண்டாட்டங்களின்போது, வீண்சர்ச்சைகள் எழுமளவுக்கு முஸ்லிம்கள் நடந்து கொள்ளக் கூடாது. இவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென சில சக்திகள் எதிர்பார்க்கின்றன. இதனால், இந்த



விடயத்தில் விழிப்புத் தேவைப்படுகிறது.

சர்வதேச அளவில் முஸ்லிம்களைக் குழப்பவாதிகளாகக் காட்ட முனையும் சக்திகளுக்குப் படிப்பினையாக, பெருநாள் கொண்டாட்டங்கள் அமைய வேண்டும். திரைமறைவில் செயற்பட்டு, நமது இலட்சியங்களை கபளீகரம் செய்வோருக்கு இதுவே பாடமாக அமையும். இதனால்தான், சமூக ஐக்கியத்தை வலுப்படுத்தும் பெருநாள் கொண்டாட்டங்கள் தேவை என்கிறோம்.

சிறுபான்மையினரைக் கௌரவிக்கும் அரசியல் கோட்பாடுகளைப் பலப்படுத்துவதே எமது நோக்கம். அதலபாதாளத்தில் விழுந்திருந்த நாட்டின் பொருளாதாரம் தற்பொழுது மீட்கப்பட்டு, மக்களின் வாழ்க்கை சுமூகமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் ஒலிக்கீற்றொன்று தென்பட்டு வருகின்றது. கடந்த காலங்களைப்போலின்றி அச்சங்கள், கஷ்டங்கள் மற்றும் பாதுகாப்பின்மைகளில் இருந்து நாம் மீட்சி பெற்றுள்ளோம்.

நாட்டின் தற்போதைய ஸ்திரமான சூழலால் மக்கள் நிம்மதியுடன் வாழத் தொடங்கியுள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களாகிய நாம் மகிழ்ச்சியாக பெருநாளைக் கொண்டாட இறைவனைப் பிரார்த்திப்போம். இந்த நிலை எதிர்காலத்திலும் தொடரவேண்டும் என நான் அல்லாஹ்வை பிரார்த்திக்கின்றேன்.

அசாத் சாலி,
முன்னாள் ஆளுநர்.
தலைவர்,
தேசிய ஐக்கிய முன்னணி.

# அட்டாளைச்சேனையில் நடந்த இப்தார் நிகழ்வு!





(அபு அலா)

வரலாற்றில் முதல் தடவையாக லக்கி ஸ்டோர் சந்தி நண்பர்கள் வட்டத்தின் ஒன்று கூடலும், இப்தார் நிகழ்வும் அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய முன்றலில் இடம்பெற்றது.

லக்கி ஸ்டோர் சந்தி நண்பர்கள் வட்ட குழுவின் ஏ.அர்சாத் தலைமையில் இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வில் ஏ.சி.என். நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.சி. நியாஸ், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவின் உறுப்பினரும் மக்கள் வங்கி அக்கரைப்பற்று கிளையின் ஓய்வுபெற்ற முகாமையாளருமான இமாமுத்தீன் மௌலானா, பொத்துவில் பிரதேச மக்கள் வங்கிக் கிளையின் வியாபாரம் அபிவிருத்தி முகாமையாளர் எம்.ஐ.எம். நபீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொலிஸ் பரிசோதகர் எம்.ஏ.ஹசிப், ஈஸ்ட் லங்கா நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் முஹம்மது நியாஸ் உள்ளிட்ட லக்கி ஸ்டோர் சந்தி நண்பர்கள் வட்டத்திலுள்ள பல்துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.



# திருக்கோணேஸ்வரர் தேர், தீர்த்தம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, ஸ்ரீமாதுமையம்பாள் உடனுறை திருக்கோணேஸ்வர பெருமான் ஆலய பங்குனி உத்தர பிரமோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்றுக் காலை வெகு விமரிசையாக நடைபெற்றது. தீர்த்தத் திருவிழா இன்று பாவநாச தீர்த்தத்தில் நடைபெற்றது.



# கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலைஞருக்கு உதவித் தொகை வழங்கல்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் உதவி தேவைப்படும் சிரேஷ்ட கலைஞர்களுக்கு உதவித் தொகை கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி ஜெயானந்தி தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு சிரேஷ்ட கலைஞர்களுக்குக் காசோலைகளை வழங்கினார்.

கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவில் பாரம்பரிய கலைகளில் திறமையை வெளிக்காட்டிய உதவி தேவைப்படும் கலைஞர்களுக்கு 2024 ஆண்டுக்கான உதவித் தொகை வழங்கப்பட்டது.

இந்தக் கலைஞர்கள் இலக்கிம், நாடகம், நாட்டுக்கூத்து, சிற்பம், நடனம், ஓவியம் போன்ற பாரம்பரிய துறைகளில் திறமைகளை வெளிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் கணக்காளர் ஜேர்ச் ஆனந்தராஜ், நிர்வாக உத்தியோகத்தர் திருமதிபுனிதநாயகி ஜெயகுமார், கலாசார உத்தியோகத்தர் ஜே.ரதிதேவி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# யுக்தி சஞ்சிகை வழங்கி வைப்பு!



(அபு அலா)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் தொடராக வெளியிடப்பட்டுவரும் 'யுக்தி' இலக்கியச் சஞ்சிகையின் 08 ஆவது இதழ் வழங்கி வைக்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கலாசார உத்தியோகத்தர் எம். எஸ்.ஜௌபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம். இர்பான் கலந்து கொண்டு 'யுக்தி' இலக்கியச் சஞ்சிகையின் 08 ஆவது இதழை வழங்கினார்.

இந்த நிகழ்வில் எழுத்தாளர்கள், கலைஞர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# கல்முனையில் நடைபெற்ற பட்டிமன்றமும் பாராட்டும்

(பழுவூரான்)

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை நடத்திய "பட்டிமன்றமும் பாராட்டும்" நிகழ்வில் கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் 135 ஆவது சிறப்புச் செயலூக்கப் பட்டிமன்றமும், கதிரவன் பட்டிமன்றப் பேரவையினருக்கான பாராட்டும் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் செல்லத்தம்பி கலையரசன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில், வீதி அபிவிருத்தி, காணி அபிவிருத்தி, வீடமைப்பு, போக்குவரத்து அதிகார சபை, வீதிப் பாதுகாப்பு, நீர்ப்பாசனம், மனித வலு அபிவிருத்தி, பெண்கள் விவகாரம் மற்றும் நீர் வழங்கல் வடிகால மைப்பு அமைச்சின் செயலாளர் மூ.கோபால ரெத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வரவேற்பு நடனத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில், "மாணவர்களின் முன்னேற்றத்தில் மாணவர்களின் பங்களிப்பு போதும்- போதாது" எனும் தலைப்பிலான செயலூக்கச் சிறப்புப் பட்டிமன்றம் இடம் பெற்றது.

பாராட்டி விருது வழங்கும் நிகழ்வில் கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் தலைவர் கதிரவன் த. இன்பராசாவுக்கு 'பட்டிமன்றப் பேராசிரியர்' எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்தோடு பட்டிமன்றப் பேச்சாளர்களான கவிஞர் அ. அன்பழகன் குரூஸ் (ஆலோசகர், கதிரவன் பட்டிமன்றப் பேரவை), கவிஞர் அழகுதனு (செயலாளர், கதிரவன் பட்டிமன்றப் பேரவை), மட்டுநகர் சிவ. வரதகரன் (பொருளாளர், கதிரவன் பட்டிமன்றப் பேரவை), சோலையூரான் ஆ. தனுஷ்கரன் (உப தலைவர், கதிரவன் பட்டிமன்றப் பேரவை) ஆகியோர் "சொல் வேந்தன்" எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

# சுரபி அக்குபஞ்சர் சிகிச்சை நிலையத்தை தடை செய்வதற்குப் பல தரப்பிலும் முயற்சி

## ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளார் என்று வைத்தியர் டினேஸ் தெரிவிப்பு




யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் சுரபி அக்குபஞ்சர் சிகிச்சை நிலையத்தைத் தடை செய்வதற்குப் பல்வேறு தரப்பிலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு எதிராக ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளேன் என்று அக்குபஞ்சர் வைத்தியர் கே. டினேஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் இடம் பெற்ற நேற்று முன்தினம் (08) ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

எமது சிகிச்சைக்காக வந்த ஒருவருக்கு காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். அங்கு அவருக்கு உரிய சிகிச்சைகள் வழங்காமையால் அவரின் காலில் வீக்கம் ஏற்பட்டுள்ளது. அதற்காக சத்திர சிகிச்சை செய்துள்ளார்கள். அதற்கான ஆதாரங்களை உயிரிழந்தவரின் மனைவி என்னிடம் சமர்ப்பித்துள்ளார்.

சுயநினைவுடன், நடமாட கூடிய நிலையில் இருந்தவரை அவசர சிகிச்சை பிரிவுக்கு கொண்டு சென்ற பின்னர் உயிரிழந்த நிலையில் சடலமாகவே உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 24 நாள்கள் சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்த நபர், என்னிடம் சிகிச்சை பெற்றதால் தான் உயிரிழந்தார் என்று ஊடகங்களுக்குச் செய்திகளை வழங்கியுள்ளனர்.

எமது சிகிச்சை நிலையத்தைத் தொழிற்படாது செய்வதற்கான சதி நடவடிக்கையாகவே நான் இதனை பார்க்கிறேன். எங்களின் சிகிச்சை நளலை.

எங்களின் அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அவற்றை உரிய சுகாதார முறைப்படியே கையாள்கிறோம். அவ்வாறு இருக்க காய்ச்சல் வந்த ஒருவருக்கு எமது சிகிச்சையால் தான் காய்ச்சல் வந்தது என கூறுகின்றார்கள்.

நாங்கள் ஏற்கனவே மருந்தில்லாத சிகிச்சைகளையே முன்னெடுக்கிறோம் அதன் ஊடாக பெரும் எண்ணிக்கையான நோயாளர்களைக் குணமாக்கியுள்ளேன். அவ்வாறு குணமானவர்களில் ஆங்கில மருத்துவர்களால் முடியாது என்று கைவிடப்பட்டவர்களே அதிகம். அவை சில ஆங்கில வைத்தியர்களின் தனிப்பட்ட வருமானத்தை பாதிக்கும் என்பதால்தான் எனது சிகிச்சை நிலையத்தைத் தடை செய்ய முயல்கின்றனர்.

அக்குபஞ்சர் சிகிச்சை முறையில் எந்தவிதமான மருந்துகளும் இல்லாமல் நோய்களை நாம் குணப்படுத்துவதால் , மருந்துகளை வழங்கி சிகிச்சை வழங்குபவர்களின் வருமானம் பாதிக்கப்படுவதால்தான் தவறான முறையில் எமது சிகிச்சையை விமர்ச்சிக்கின்றனர்.

இலங்கையில் யானைகளை பழக்கப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பும் முறை நீண்ட காலமாக இருக்கிறது. அது யானைகளின் அக்குபஞ்சர் இடங்களை அடையாளம் கண்டு அங்கு சத்தால் குத்தி அதனை வைத்து, வேலை வாங்க முடிகிறது. அக்குபஞ்சர் முறை என்பது இலங்கையை பொறுத்தவரை கற்காலத்தில் இருந்தே இருக்கிறது. இலங்கையில் தோன்றிய ஒரு மருத்துவம்.

இலங்கைக்கு வந்த சீன வணிகர்கள், இலங்கையில் இருந்த அக்குபஞ்சர் முறைகளை கற்றுத் தனது நாட்டில் சிகிச்சை அளித்தனர். இன்று அக்குபஞ்சர் சீன மருத்துவம் என்கிறார்கள். அது தவறு. அது இலங்கை மருத்துவம். அவ்வாறான மருத்துவத்தை இலங்கையில் உள்ள ஆங்கில மருத்துவர்கள் தவறான மருத்துவம் என்கிறார்கள்.

எனது மருத்துவ சிகிச்சை நிலையத்தை நான் உரிய முறையில் பதிவு செய்தே நடத்தி வருகிறேன். தகுதியான கல்வித் தகமையுடனே சிகிச்சை வழங்கி வருகிறேன். எனது சிகிச்சையால் யாரும் உயிரிழக்கவில்லை.

எமது சிகிச்சை நிலையத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் முறையிடவுள்ளோம்.- என்றார்.

# மாட்டிறைச்சிக்கு விலை நிர்ணயம் செய்யாமையால் மக்கள் அவலம்!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் பலவற்றில் அதிக விலைக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்யப்படுகிறது என்று பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மன்னார் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ மாட்டிறைச்சி 1800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இந்த நிலையில் மன்னார் நகர சபைக்கு உட்பட்ட மாட்டிறைச்சி நிலையங்களில் 2000 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது என்று பொது மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

மன்னார் நகர சபையின் கீழ் இயங்கும் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்கள் அதிகளவுக்கு மாட்டிறைச்சி விற்பனை செய்வது மாத்திரம் இல்லாமல் பிரதேச சபை எல்லைக்குள் குறைந்த விலையில் மாடுகள் இறைச்சிக்காக கொள்வனவுக்காக தெரிவு செய்யப்படும் நிலையில் அவற்றை அதிக விலைக்கு கொள்வனவு செய்து மாட்டின் விலையையும் சந்தையில் அதிகரிப்பதாக ஏனைய பிரதேச சபை மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னதாகவே மன்னார் மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களில் கடந்த உள்ளூராட்சி சபைகள் இருந்த காலப் பகுதியில் மாட்டிறைச்சியின் விலை 1800 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்ட நிலையில் நிர்ணய விலை நீக்கப்பட்டதாக உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரை வினவிய நிலையில் மாட்டிறைச்சி விற்பனை விலையை தீர்மானிப்பதற்கு தங்களுக்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபரிடம் தெரியப்படுத்திய நிலையில், மாட்டிறைச்சியை ஒரே மாவட்டத்தில் ஒவ்வொரு பகுதியில் வெவ்வேறு விலையில் விற்பனை செய்வது என்பது பொருத்தமற்றது .

எனவே நிர்ணய விலை ஒன்றை தீர்மானிப்பது தொடர்பில் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபை உள்ளடங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வேன் என்று தெரிவித்துள்ளார்.

# மன்னார் ஒரு பேசும் பொருளாக உலகளவிய ரீதியில் மாறியுள்ளது

## அமெரிக்க குழுவிடம் மன்னார் பிரஜைகள் குழு எடுத்துரைப்பு





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவில் மக்களின் வாழ்வாதாரம் சீர்குலைந்துள்ளது மட்டுமல்ல இங்கு வாழும் மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறும் அபாயமும் தோன்றியுள்ளது. இதனால் தற்பொழுது மன்னார் தீவு உலகம் பூராகவும் ஒரு பேசும் பொருளாக மாறியுள்ளது.

மன்னார் பிரஜைகள் குழு அமெரிக்க சூழவியல் குழுவிடம் இவ்வாறு எடுத்துரைத்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரக அலுவலகத்திலிருந்து மன்னாருக்கு வருகை தந்திருந்த அமெரிக்க சூழவியல் குழு ஒன்று பொருளாதார சூழவியல் அதிகாரி கிறிஸ்தோபர் கூச் தலைமையில் மன்னாருக்கு வருகை தந்திருந்த வேளையில் மன்னார் பிரஜைகள் குழு ஆளுநர் சபையினரை சந்தித்தது.

திங்கள் கிழமை (08) மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார் தலைமையில் மன்னார் பிரஜைகள் குழு அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போது மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசு அபிவிருத்தி என்ற போர்வையில் மன்னார் தீவில் முன்னெடுக்கும் காற்றாலை மற்றும் கனியவள மணல் அகழ்வினால் மன்னார் மக்களின் வாழ்வாதாரம் முற்றாக அழியும் அபாயம் தோன்றியுள்ளது.

அத்துடன் இங்கு வாழும் மக்களின் இருப்பிடமும் கேள்விக்குறிக்கு உள்ளாகியுள்ளதுடன் மன்னார் தீவும் விரைவில் கடலுக்கு இரையாகும் நிலையும் தோன்றியுள்ளது.

வடக்கு மாகாணத்தில் மன்னாரையும் முல்லைத்தீவையும் ஒதுக்கப்பட்ட மாவட்டங்களாகவே அரசு ஒதுக்கி வைக்கும் நிலையில் இருந்து வருகின்றது.

மன்னாருக்கு அபிவிருத்தி என்ற திட்டங்களை அரசு முன்னெடுக்கும் ஒவ்வொன்றும் அவைகள் மன்னார் மக்களுக்கு பாதிப்புக்களை உண்டு பண்ணும் திட்டங்களாகவே காணப்படுகின்றது.

இலங்கையில் நாட்டில் இல்லாத அளவுக்கு மன்னாரிலிருந்து மதவாச்சி வரைக்கும் நான்கு இடங்களில் இராணுவ பரிசோதனை சாவடிகள் காணப்படுகின்றன.

இதனால் இங்கு பொருள்களைப் பரிசோதிப்பதற்காக ஏற்றி இறக்கும் நிலை தொடர்வதால் பொருள்களின் விலைகளும் ஏனைய இடங்களை விட அதிகமாகக் காணப்படுகின்றது.

மன்னார் மக்களின் குடியிருந்த, குடியிருக்கும் காணிகளையும், வயல்களையும் வன இலாக, பறவைகள் சரணாலயம், பாதுகாப்பினரின் முகாம் என கையகப்படுத்தி வைத்திருப்பதால் மக்கள் சொல்லொண்ணா துன்பங்களுக்கும் ஆளாகியுள்ளனர் – என்று தெரிவித்துள்ளனர்.

# நோன்புப் பெருநாளை முன்னிட்டு அன்பளிப்புப் பொருள்கள் வழங்கல்






(எம். எப். றிபாஸ்)

அம்பாறை மாவட்டத்தில் இயங்கி வரும் ஈ.சீ.எம். நிறுவனம், நோன்புப் பெருநாளை முன்னிட்டு அன்பளிப்பு பொருள்களை வழங்கியுள்ளது.

நிறுவனத்தின் ஸ்தாபகர் உதுமான் கண்டு நாபீர் தலைமையிலான குழுவினர் அன்பளிப்புப் பொருள்களை வழங்கியுள்ளது. அவர்களின் தேவைகளையும் கேட்டறிந்து அவற்றுக்கான உதவிகளையும் செய்து வருகின்றனர். மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, போனற பிரதேசங்களுக்கு முதற்கட்டமாக உதவிகளை வழங்கினர்.

இதேவேளை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக சமூக பணியில் ஈடுபட்டு வரும் நாபீர் பவுண்டேஷன் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளுக்கும், சுயதொழில் ஊக்குவிப்புக்கான வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது.



# மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் இந்தியாவில் தேர்தல்களே நடக்கா!

## நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகால பிரபாகர் எச்சரிக்கை

புதுடெல்லி,ஏப்.10

வரும் நாடாளுமன்ற தேர்தலில் பிரதமர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் நாடு முழுவதும் லடாக்-மணிப்பூர் போன்ற சூழ்நிலைகள் உருவாகும் என மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமனின் கணவர் பரகால பிரபாகர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில் -

வரும் நாடாளுமன்ற தேர்தலில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் தேர்தலே நடக்காது. மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் இந்தியாவின் வரைபடம் மாறும். மணிப்பூர், லடாக் பிரச்சினை போல நாடெங்கும் நடக்கும். இந்தியா தேர்தலையே மறந்துவிட வேண்டியதுதான்.

இனி '(விரும்பினால் நீங்கள்)பாகிஸ்தானுக்கு செல்லுங்கள்...!' என்பது போன்ற வெறுப்புப் பேச்சுக்களை மோடியே செங்கோட்டையில் இருந்து பேசுவார். பிரதமர் மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால், குக்கி மற்றும் மெய்தி சமூகங்களுக்கு இடையிலான இன மோதல்களால் மணிப்பூரில் ஏற்பட்ட அமைதியின்மை இந்தியா முழுவதும் வழக்கமானதாக மாறிவிடும். - என்றார்.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவரும் பொருளாதார வல்லுநருமான பரகால பிரபாகர் தெரிவித்துள்ள எச்சரிக்கை கருத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியக் கடல் பகுதியில் ஊடுருவிய 3 சீன உளவும் கப்பல்களால் பரபரப்பு

புதுடெல்லி,ஏப்.10

இந்தியாவின் முக்கிய இராணுவ நிலைகளை உளவு பார்க்க சீனா பல வேறு யுக்திகளை கையாண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக தென் இந்தியாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் தொழில் திட்டங்களை சீன கப்பல்கள் இந்திய பெருங்கடலில் இருந்த படியே நவீன கருவிகள் மூலம் உளவு பார்ப்பது அடிக்கடி நடக்கின்றது.

அந்த வகையில் தற்போது இந்திய பெருங்கடல் பகுதியில் 3 சீன உளவு



கப்பல்கள் ஊடுருவி வந்திருப்பது தெரிய வந்துள்ளது. அதில் ஒரு கப்பல் அந்தமான் தீவின் மேற்கு பகுதியில் சர்வதேச கடல் எல்லை அருகே நீண்ட நாள்களாக நின்று கொண்டிருக்கிறது.

அந்த கப்பல் அந்தமானில் உள்ள இந்தியக் கடற்படை கப்பல்களின் நகர்வுகளை கண்காணிப்பதாக கூறப்படுகிறது. சமீபத்தில் அந்த உளவு கப்பல் மிகப்பெரிய ஒத்திகை ஒன்றை நடத்தியதாகவும் தெரிய வந்துள்ளது.

மற்றொரு உளவு கப்பல் மாலத்தீவு அருகே இருக்கிறது. 3 ஆவது உளவு கப்பல் மொரீசியஸ் தீவு அருகே சுற்றி வந்து கொண்டிருக்கிறது. இந்த 3 உளவு கப்பல்களும் இந்தியாவின் பாதுகாப்புக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இருக்கின்றன என இந்தியத் தரப்பில் கருதப்படுகிறது.

# பைக் - கார் மோதிய விபத்தில் ஐவர் பலி

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே சிவரக்கோட்டையில் பைக் மீது கார் மோதிய விபத்தில் 5 பேர் உயிரி ழந்தனர்.



மதுரை வில்லாபுரம் பகுதியை சேர்ந்த கனகவேல் என்பவர் தளவாய்புரத்தில் உள்ள மாரியம்மன் கோவிலில் பூ மிதி திருவிழாவில் பங்கேற்க குடும்பத்துடன் சென்றிருந்தார். நிகழ்ச்சி முடிந்து சாமி தரிசனம் செய்துவிட்டு இன்று காலை தளவாய் புரத்திலிருந்து மதுரை நோக்கி காரில் வந்து கொண்டிருந்தார். காரை கனகவேல் மகன் மணி ஓட்டி வந்தார்.

காலை 6.30 மணிக்கு கார் விருதுநகர்-திருமங்கலம் நான்கு வழிச்சாலையில் உள்ள சிவரக்கோட்டை பஸ் நிறுத்தம் அருகே வந்தது. அதே சமயம் வழியில் உள்ள எஸ்.பி.நத்தம் சாலையில் இருந்து திருப்பரங்குன்றம் அருகே உள்ள நிலையூரை சேர்ந்த கொய்யாப்பழ வியாபாரி பாண்டி பின்னால் வைத்திருந்த பழக்கூடையுடன் இருசக்கர வாகனத்தில் சாலையை கடக்க முயன்றார்.

இதனை சற்றும் எதிர்பாராத காரை ஓட்டி வந்த மணி, இருசக்கர வாகனத்தில் வந்த வியாபாரி மீது மோதாமல் இருப்பதற்காக திடீர் பிரேக் போட்டு நிறுத்த முயன்றார். ஆனால் கட்டுப்பாட்டை இழந்த கார் தாறுமாறாக ஓடி இருசக்கர வாகனம் மீது மோதியது.

அதிவேகமாக வந்த கார் அத்துடன் நிற்காமல் சாலையில் இருந்த தடுப்பு கம்பியிலும் மோதி தலை குப்புற கவிழ்ந்தது. இதில் காரில் வந்த நால்வரும் இருசக்கர வாகன ஓட்டியும் பலியாகினர். காரில் இருந்த ஐவர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

# காசா யுத்தத்தில் இஸ்ரேலின் பிரதமர் தவறு செய்கிறார் என பைடன் விசனம்

வொஷிங்டன்,ஏப்.10

காசா போரில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தவறு செய்கிறார் என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போரை முடிவுக்கு கொண்டுவர பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. அமெரிக்கா, கத்தார், எகிப்து போன்ற நாடுகளின் மத்தியஸ்தத்தில் இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்தில் எகிப்து தலைநகர் கெய்ரோவில் விரைவில் இஸ்ரேல் – ஹமாஸ் இடையே பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே, காசா முனையில் கடந்த சில நாள்களுக்கு முன் இஸ்ரேல் நடத்திய டிரோன் தாக்குதலில் உலக மத்திய சமையல் அறை என்ற தன்னார்வு தொண்டு அமைப்பை சேர்ந்த ஊழியர்கள் 7 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு பல்வேறு தரப்பினரும் இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர். அதேவேளை, காசா முனையின் உள்ள ராபா நகரில் விரைவில் தாக்குதலை நடத்துவோம் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காசா போரில் நெதன்யாகு தவறு செய்கிறார் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தனியார் செய்தி நிறுவனத்திற்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பேட்டியளித்தார். அப்போது அவரிடம் இஸ்ரேல் – ஹமாஸ் போர் குறித்து கேள்வி எழுப்பப்பட்டது.



ஜோ பைடன் கூறியவை வருமாறு:–

காசா போரில் பிரதமர் நெதன்யாகு தவறு செய்கிறார் என்று நினைக்கிறேன். போரை அவர் கையாளும் விதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. நிவாரண உதவிகள் வழங்கும் அமைப்பின் வாகனம் மீது டிரோன் தாக்குதல் நடத்தப்பட்டது மூர்க்கத்தனமானது.

காசா மீதான போரை இஸ்ரேல் தற்காலிகமாக நிறுத்த வேண்டுமென நான் அழைப்பு விடுக்கிறேன். காசாவுக்குள் 6 முதல் 8 வாரங்கள் நிவாரண பொருள்கள் செல்ல அனுமதிக்க வேண்டும். உணவு, மருந்து பொருள்கள் செல்ல முழு அனுமதி அளிக்க வேண்டும். காசாவுக்குள் நிவாரணப் பொருள்கள் செல்லவிடாமல் இஸ்ரேல் தடுக்கிறது. நிவாரண பொருள்கள் விநியோகத்தையும் தடுக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.



# தரைப் படைகளை அனுப்பி ரபா நகரை கைப்பற்றுவதில் இஸ்ரேல் பிரதமர் உறுதி

ஜெருசலேம்,ஏப்.10

காசாவின் ரபா நகருக்குள் தரைப் படையை அனுப்பி அந்த நகரை ஆக்கிரமிப்பது உறுதி என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சூளுரைத்தார்.

பாலஸ்தீனத்தின் காசா நகரை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த ஆண்டு இஸ்ரேல் நாட்டின் மீது ஆயிரக்கணக்கான ராக்கெட் குண்டுகளை வீசியமையுடன் அந்த நாட்டுக்குள் ஊடுருவி கொடூர தாக்குதலை நடத்தினர். இதில் சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 250 பேரை ஹமாஸ் அமைப்பினர் பணய கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். இதனால் வெகுண்டெழுந்த இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பை அடியோடு ஒழிப்பதாக சூளுரைத்து, காசா மீது போரை தொடங்கியது. 6 மாதங்களை கடந்த பிறகும் இந்த போர் முடிவின்றி நீண்டு வருகிறது.

ரபா நகரை ஹமாஸ் அமைப்பின் கடைசிக் கோட்டையாக கருதும் இஸ்ரேல் அங்கு தனது தரைப்படையை அனுப்பி அந்த நகரை ஆக்கிரமிக்கத் தீவிர முனைப்புக் காட்டி வருகிறது.

இந்த நிலையில் காசாவின் ரபா நகருக்குள் தரைப்படையை அனுப்பி அந்த நகரை ஆக்கிரமிப்பது உறுதி என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சூளுரைத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் “ஹமாஸ் உடனான போரில் வெற்றிப் பெறுவதற்கு ரபா நகரை கட்டுப்பாட்டில் எடுப்பது அவசியம். அது நடக்கும், அதற்கான ஒரு நாள் உள்ளது” எனக் கூறினார்.

பெஞ்சமின் நெதன்யாகுவின் இந்த பேச்சுக்கு அமெரிக்கா தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது. ரபாவுக்கு தரைப் படையை அனுப்புவது மிகப்பெரிய தவறு என்றும், அங்குள்ள பொது மக்களை பாதுகாப்பதற்கான நம்பகமான திட்டத்தை உருவாக்க வேண்டியது அவசியம் எனவும் அமெரிக்கா வலியுறுத்தி உள்ளது.

பக்கங்கள் 06

கனடா முரசு

புதன்கிழமை 10/04/2024

## நோர்த் யோர்க்கில் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை

ஒன்ராரியோ,ஏப்ரல்10

நோர்த் யோர்க்கில் 51 வயது நபர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபரை பொலிஸார் C2



# கனடாப் பிரதமர் - கியூபெக் முதல்வர் குடியேற்ற கொள்கையில் முரண்பாடு

**கியூபெக்,ஏப்ரல்10**

**கியூபெக்கில் தற்காலிக வதிவாளர்களின் எண்ணிக்கையைக் குறைக்காவிட்டால், சர்வசன வாக்கெடுப்பு ஒன்றிற்கு செல்ல நேரிடும் என கியூபெக்கின் முதல்வர் பிரான்சுவா லெகோல்ட் மத்திய அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.**

வாக்கெடுப்பு நடத்துவது தமது அரசாங்கத்தின் குறுகிய கால திட்டங்களில் இல்லை என்ற போதிலும், கியூபெக்கின் குடியேற்றக் கோரிக்கைகளை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வழங்காவிட்டால் அது மாறக்கூடும் என்றும் ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த லெகோல்ட் குறிப்பிட்டுள்ளார்.

மார்ச் மாதம் இரு தலைவர்களுக்கிடையிலான சந்திப்பின் போது, மாகாணத்திற்கு யார் குடியேறலாம் என்பதில் கியூபெக் அரசாங்கத்திற்கு முழு அதிகாரமும் இருக்க வேண்டும் என்ற லெகோல்ட்டின் அழைப்பை ட்ரூடோ நிராகரித்திருந்தார்.

ஆனால் குடியேற்றம் தொடர்பான மற்ற விடயங்களில் பிரதமர் கணிசமான அளவு 'வெளிப்படைத்தன்மையை' காட்டினார் என்றும் இருவரும் ஜூன் 30 ஆம் திகதிக்குள் மீண்டும் சந்திப்பார்கள் என்றும் லெகோல்ட் கூறியிருந்தார்.

# நடுத்தர வர்க்கத்தினர் மீதான வரிகளை உயர்த்துவதை நிதியமைச்சர் நிராகரிப்பு

ஒன்ராரியோ,ஏப்ரல்10

மத்திய அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்டத்தில் நடுத்தர வர்க்கத்தின் மீதான வரிகளை உயர்த்துவதை நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் நிராகரித்துள்ளார்.

ஆனால் பெருநிறுவனங்கள் அல்லது செல்வந்தர்களுக்கான வரி அதிகரிக்கப்படுமா அல்லது இல்லையா என்பது தொடர்பில் அவர் எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை.

செவ்வாய்க்கிழமை ஒரு செய்தி மாநாட்டின் போது கார்ப்பரேட் கனடா அல்லது நடுத்தர வர்க்கத்தின் ஒரு பகுதியல்லாத பிறர் மீது புதிய வரிகள் விதிக்கப்படுமா என்று கேட்டபோது நிதியமைச்சர் அதற்கு வெளிப்படையாகப் பதிலளிக்கவில்லை.

மாறாக, கனேடியர்களுக்கு வீடு மற்றும் C2





## டொராண்டோ தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற

# முறைகேடுகள் குறித்து நடவடிக்கை ஏதும் எடுக்காதிருக்கப் பரிந்துரைக்கப்பட்டதாம்

ஒன்ராரியோ,ஏப்ரல்10

2019இல் லிபரல் தேர்தல் பிரச்சாரத் தின் போது ட்ரூடோவை டொராண்டோ தேர்தல் தொகுதியில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காதிருக்க பரிந்துரைத்ததாக கட்சியின் பிரசார பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

டான் வெலி வடக்கில் லிபரல் வேட்பா ளராக ஹான் டோங்கைத் தேர்ந்தெடுப் பதில் சீனாவின் தலையீடு பற்றிய குற்றச்சாட்டுகளுக்கு லிபரல் கட்சியின் பிரசார பணிப்பாளர் ஜெர்மி பிராட் ஹர்ஸ்ட் அளித்த சாட்சியத்தின் போது இந்த விடயங்கள் வெளியாகியுள்ளன.

2019இல் லிபரல் கட்சிப் பிரதிநிதிக ளுக்கு உளவுத்துறை அதிகாரிகள் கூறப்படும் முறைகேடுகள் குறித்து விளக்கமளித்தனர் எனவும், அந்தத் தகவலை அவர் பிரதமருக்குத் தெரிவித் தார் எனவும் பிராட்ஹர்ஸ்ட் கூறுகிறார்.

வேட்புமனுத் திட்டக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கட்சி நிர்வாகிகளைத் தொடர்ந்து வந்ததாகவும், வழக்கத்திற்கு மாறான எதையும் அவர்கள் கவனிக்க வில்லை என்றும் அவர் கூறுகிறார்.

மேலும், உளவுத்துறை அதிகாரிகள் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப் பரிந்துரைக்கப்படவில்லை எனவும் தகவல் வெளியாகியுள்ளது.



### நோர்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடி வருகின்றனர்.

பாத்ரஸ்ட் ஸ்ட்ரீட் மற்றும் வில்ஸன் அவெனியு பகுதியில் உள்ள ஒரு வீதியில் பலத்த காயங்களுடன் ஒரு நபர் பற்றிய விவரங்கள் பொலிஸாருக்கு கிடைத் தமையையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வணிக வளா கத்திற்கு வெளியே இருவர் கைகலப்பில் ஈடுபட்டுக் கொண்டிருப்பதைக் கண்டுள் ளனர்.

இதன்போது, ஒருவர் மற்றையவரை கூரிய ஆயத்ததால் குத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

காயமடைந்த நபருக்கு அவசர சிகிச்சையளிக்க முற்பட்ட போதிலும், அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந் துள்ளார்.

உயிரிழந்தவர் டொராண்டோவைச் சேர்ந்த ஜொலி ஆன் என அடையாளம் காணப்பட்டார், சந்தேகநபர் 67 வயதான அல்போன்சோ கோர்பஸ் எனப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

### நடுத்தர...

(முதலாம் பக்கத்தொடர்ச்சி)

செயற்கை நுண்ணறிவு போன்ற முக்கியமான விடயங்களில் முதலீடு செய்ய வேண்டிய 'அவசர' தேவையை அவர் வலியுறுத்தியுள்ளார்.

'இளம் கனடியர்கள் (குறிப்பாக) அந்த முதலீடுகளைச் செய்ய வேண்டும் – வீட்டுவசதிக்கான முதலீடுகள், மலிவு விலையில் முதலீடுகள், உற்பத்தித்திறன் மற்றும் வளர்ச்சியில் முதலீடுகள் செய்ய வேண்டும்'என ஃப்ரீலேண்ட் கூறியுள்ளார்.

# மொன்ட்ரியல் புறநகர்ப் பகுதியில் யுவதியின் சாவு குறித்து விசாரணை

கியூபெக்,ஏப்ரல்10

மொன்ட்ரியல் புறநகர்ப் பகுதியில் 20 வயதுடைய பெண் ஒருவரின் மரணம் குறித்து கியூபெக் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கேண்டியாக் பகுதியில் கிடைத்த தொலைபேசி அழைப்பையடுத்து, அங்குள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு சென்று பார்த்தபோது இறந்த நிலையில் இளம்பெண் ஒருவரின் சடலத்தை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இந்த மரணம் ஒரு கொலையா என்பது தொடர்பில் பொலிஸார் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.




# இளைஞர்களின் மனநலப் பாதுகாப்புக்காக 500 மில்லியன் டொலர்கள் நிதி ஒதுக்கீடு!

ஒன்ராரியோ,ஏப்ரல்10

இளைஞர்களுக்கு அதிக மனநலப் பாதுகாப்பு வழங்கும் நோக்கில் சமூக சுகாதார நிறுவனங்களுக்கு உதவுவதற்காக மத்திய அரசாங்கம் 500 மில்லியன் டொலர்கள் நிதியை ஒதுக்கவுள்ளது.

ஏப்ரல் 9ஆம் திகதியன்று, நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் ஒட்டாவாவில் ஏனைய அமைச்சரவை அமைச்சர்களுடன் சேர்ந்து இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதில் மனநலம் மற்றும் போதைப்பொருள் அடிமையாதல் விவகாரங்கள் தொடர்பான அமைச்சர் யாரா சாக்ஸும் கலந்து கொண்டார்.

'இப்போது பல கனடியர்கள் போர், புவிசார் அரசியல் அமைதியின்மை, காலநிலை மாற்றம் மற்றும் நிதி நெருக்கடிகள் காரணமாக மன அழுத்தத்தையும் பதற்றத்தையும் எதிர்கொள்கின்றனர்' என்று சாக்ஸ் கூறினார்.

புதிய நிதியானது 2021ஆம் ஆண்டு லிபரல் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட இரண்டாம்நிலை கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் மனநல தேவைகளில் உதவுவதற்கான உறுதிப்பாட்டை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் உள்ளதா என்பது தொடர்பாக இந்த அறிவிப்பில் எந்த விடயங்களும் உள்ளடக்கப்படவில்லை.



# முழு சூரிய கிரகணத்தன்று பிறந்த ஜெனிசன் ஸ்கொட்

ஒன்ராரியோ,ஏப்ரல்10

முழு சூரிய கிரகணம் இடம்பெற்ற 2024ஆம் ஆண்டு என்பது பலரைப் பொறுத்தவரையில் தொலைதூர நினைவாக அல்லது படங்களின் தொகுப்பாக மாறும்.

ஆனால் அலென்னா டுயார்டே மற்றும் அவரது குடும்பத்தினருக்கு, ஒவ்வொரு ஆண்டும் அவர்கள் தங்கள் இளைய மகனின் பிறந்தநாளைக் கொண்டாடும் நாளை அரிய வான் நிகழ்வான சூரிய கிரகண நாளாக நினைவுபடுத்தப் போகின்றார்கள்.




சூரிய கிரகணம் நிகழ்ந்த, ஏப்ரல் 8ஆம் திகதி திங்கட்கிழமையன்று ஒஷ‌வா லேக்ரிட்ஜ் மருத்துவமனையில் ஜெனிசன் - ஸ்கொட்டைப் பெற்றெடுப்பார் என்று டுயார்டே எதிர்பார்க்கவில்லை.

ஏனெனில், ஒரு வாரத்தின் பின்னரே அவர்களுக்கான பிரசவ நாள் குறிக்கப்பட்டிருந்தது.ஜெனிசன்-ஸ்காட் காலை 8:10 மணிக்கு பிறந்தாலும், அன்று பிற்பகலில் ஏற்பட்ட கிரகணத்தால் மருத்துவ மனை பரபரப்பாக இருந்தது என்று டுயார்டே கூறினார்.



# உள்கட்டமைப்பு இடைவெளியை நிரப்புமாறு வலியுறுத்துகிறது பூர்வீகக் குடிகளின் சபை!

ஒன்ராரியோ,ஏப்ரல்10

பல தசாப்தங்களாக குறைந்த நிதியுதவி மற்றும் தோல்வியுற்ற நம்பிக்கைக் கடமைகள் 349 பில்லியன் டொலர்கள் உள்கட்டமைப்பு இடைவெளியை உருவாக்கியுள்ளன என்று பூர்வீகக் குடிகளின் சபை கூறியுள்ளது.

இந்த இடைவெளியை அவசரமாக நிரப்ப வேண்டும் என்று இந்தச் சபை கோரியுள்ளதுடன், அதன் பொருட்டு மத்திய அரசாங்கத்தை உதவிக்கு அழைத்துள்ளது.

நேற்று ஏப்ரல் 9ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையில், வீட்டுவசதிக்கு 135 பில்லியன் டொலர்கள், டிஜிட்டல் இணைப்புக்கு 5 பில்லியன் டொலர்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளுக்கு 209 பில்லியன் டொலர்கள் தேவை என இந்தச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

‘இந்த முதலீடு இல்லாமல், பூர்வீகக் குடிகளின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சமூக உள்கட்டமைப்பு ஆகியவை ஒவ்வொரு ஆண்டும் மோசமான நிலையில் இருக்கும்’ என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 2030 க்குள் உள்கட்டமைப்பு இடைவெளியை இல்லாது செய்வதாக உறுதியளித்தார். ஆனால் மத்திய அரசாங்கத்தின் கணக்காய்வாளர் நாயகம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் அந்த இடைவெளி அதிகரித்துச் செல்வதாக தெரிவித்துள்ளார்.

600 க்கும் மேற்பட்ட பூர்வீகக் குடிகளின் தலைவர்கள் சார்பாக வாதிடும் இந்த சபை இவ்விடயத்திற்காகக் குரலெழுப்பி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.








# சீக்கியர் கோவிலைக் கட்டியவர் எட்மண்டனில் சுட்டுக் கொலை

கனடாவின் எட்மண்டனில் உள்ள குருநானக் சீக்கியர் கோவிலைக் கட்டியவரும் அதன் தலைவருமான பொறியியலாளர் பூட்டா சிங் கில் திங்களன்று சுட்டுக் கொல்லப்பட்டார் என கனேடிய செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. கில் கொலை வழக்கின் விசாரணையை ஈபிஎஸ் கொலை புலனாய்வாளர்கள் வழிநடத்துகின்றனர்.

இந்திய வம்சாவளியான இவர், அல்பேர்ட்டா மாகாணத்தில் உள்ள ஒரு கட்டுமானத் தளத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார் என எட்மண்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மர்ம நபர் நடத்திய துப்பிக்கிச்சூட்டில் பூட்டா சிங் உட்பட மூன்று பேர் படு காயமடைந்து விழுந்துள்ளனர். பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த போது பூட்டா சிங்கும், மற்றொரு நபரும் இறந்து விட்டனர்.

காயமடைந்த மூன்றாவது ஆள் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப் பட்டார். இந்த நிலையில் பிரேத பரிசோதனைகள் நேற்று நடைபெறவிருந்தன.

இதற்கிடையில், பூட்டா சிங் கொல லப்படுவதற்கு முன்பு மிரட்டி பணம் பறிக்கும் அழைப்புகள் அவருக்கு வந்தன என ஊடக அறிக்கைகள் தெரி விக்கின்றன.

# கனடாத் தேர்தல்களில் தலையிட்டோமா? அடியோடு மறுத்துரைக்கின்றது இந்தியா!

2019 மற்றும் 2021-ஆம் ஆண்டு நடந்த கனேடிய பொதுத் தேர்தல்களில் இந்தியாவும் பாகிஸ்தானும் தலையிட்டன என கனடாப் புலனாய்வு அமைப்பு நடத்திய விசாரணை அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த அறிக்கையை இந்திய வெளியுறவு அமைச்சகம் நிராகரித்தது.

மேலும், இந்தியா தலையிடுவதற்கு பதிலாக, கனடா இந்திய அரசாங்கத்தின் உள் விவகாரங்களில் மூக்கை நுழைக்கிறது என்று இந்தியா எதிர்ப்பும் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம், கனேடிய ஜனாதிபதி ஜஸ்டின் ட்ரூடோ 2019 மற்றும் 2021 கனேடிய பொதுத் தேர்தல்களில் இந்தியாவும் பாகிஸ்தானும் தலையிட்டன எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டார்.

கனேடிய பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவினரால் விசாரணை நடத்தப்பட்டது. அதன் அறிக்கை சமீபத்தில் கிடைத்தது.

கனடாவில் 2019 மற்றும் 2021-இல் நடந்த தேர்தல்களில் இந்தியா - பாகிஸ்தான் இரண்டுமே தலையிட்டன என அந்த அறிக்கை கூறுகிறது.

குறிப்பாக இந்தியாவில், 2021 தேர்தலின் போது, அரசு ஏஜென்ட் மூலம், இந்தியர்கள் அதிக வாக்காளர்கள் உள்ள தொகுதிகளில் கவனம் செலுத்தி, அங்கு இந்திய ஆதரவு வேட்பாளருக்கு பிரசாரம் செய்ததாக அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அந்தத் தேர்தல் பிரச்சாரத்துக்கு இந்திய அரசாங்கத்தால் இரகசியமாக நிதியளிக்கப்பட்டது என்றும் அறிக்கை குற்றம்



சாட்டியுள்ளது.

மேலும், பாகிஸ்தான் அரசாங்கம் 2019 தேர்தலில் அதன் தேசியவாத சார்பு வேட்பாளர்களுக்கு இந்த வழியில் நிதி உதவி வழங்கியதாக அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது.

கனேடிய அதிபரின் எங்கள் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும், இப்போதும் கூட கனடாவின் உள்ளகத் தேர்தலில் தலையிடவில்லை என்றும் இந்தியா ஆரம்பம் முதலே கூறி வருகிறது.

மாறாக எங்களின் உள்விவகாரங்களில் கனடா தலையிடு கிறது என்று இந்தியா கடுமையாக எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

இதேபோல், கனடா தனது தேர்தலில் ரஷ்யாவும் சீனாவும் தலையிட்டது குறித்து விசாரணை நடத்த கடந்த செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் உத்தரவிட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது.



# ரொறன்ரோவில் வீட்டு வரி தொடர்பில் மொத்தம் 55 ஆயிரம் முறைப்பாடுகள்!

ரொறன்ரோவில் வீட்டு வரி தொடர்பில் 55 ஆயிரம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீடுகளை காலியாக வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர்கள் மீது வரி விதிக்கப்படும் நடைமுறை காணப்படுகின்றது.

கடந்த ஆண்டில் தங்களது வீடுகள் பயன்படுத்தப்பட்டிருந்த நிலையில் இவ்வாறு வரி அறவீடு குறித்த அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன என வீட்டு உரிமையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

சில வீட்டு உரிமையாளர்கள் வரிச் செலுத்த வேண்டிய இறுதித் திகதியான மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்த மறந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நகரில் நிலவி வரும் வீட்டுத் தட்டுப்பாடு காரணமாக இவ்வாறு, காலியாக வைத்திருக்கப்படும் வீடுகள் மீது வரி அறவீடு செய்யப்படுகின்றது.

கடந்த மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வீடு பற்றிய தகவல்களை உரிய முறையில் ஆவணப்படுத்தியிருந்தால் அவர்கள் மீது தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் நகராட்சி நிர்வாகத்திடம் 55 ஆயிரம் வீட்டு உரிமையாளர்கள் பிழையாக வரி அறவீடு செய்வதற்கான அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### கார்பன் விலை அதிகரிப்பை நியாயப்படுத்துவதற்கு

# மாகாண முதல்வர்களுடன் பிரதமர் ட்ரூடோ தொலைக்காட்சி விவாதத்துக்குத் தயாரா?

### கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலிவர் சவால்

ஒன்ராரியோ,ஏப்ரல்10

நாட்டின் மாகாண முதல்வர்களுடன் நேரடி தொலைக்காட்சி விவாதத்தில் கலந்து கொண்டு கார்பன் விலை அதிகரிப்பை நியாயப்படுத்துமாறு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலிவர் சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பான பிரேரணை ஒன்றை கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் நேற்று ஏப்ரல் 9ஆம் திகதி முன்வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று இந்த பிரேரணை மீது வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

லிபரல் அரசாங்கம் கார்பன் விலை நிர்ணய விவாதத்தை தவிர்க்கவுள்ளது என்பதை அறிந்திருப்பதால், தொலைக்காட்சி கூட்டத்தை நடத்துவதற்கு ட்ரூடோ 'மிகவும் பயப்படுகிறார்' என்று தான் நம்புகிறார் எனப் பொலிவர் கூறியுள்ளார்.

ட்ரூடோ தலைமறைவாக உள்ளார் என பொலிவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

'கார்பன் வரித் தேர்தல் நடக்கப் போகிறது, ட்ரூடோ என்னிடம் மறைத்தாலும் இல்லாவிட்டாலும், கார்பன் வரித் தேர்தலில் அவர் என்னை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.' என அவர் தெரிவித்துள்ளார்.

